LIBRARY DEC 2016 UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு – 2013/2014
(மார்ச் 2016)

## EDUS 4105 Contemporary Issues and Policies in Education

நேரம் : 03 மணித்தியாலங்கள்

விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) இலங்கையின் கல்வி வரலாற்றில் கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்கள், கல்வியிற் சமசந்தர்ப்பத்தை வழங்குவதற்கு முன்னெடுத்த நடவடிக்கைகள் மூன்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

(3x5=15 புள்ளிகள்)

(ஆ) "இலங்கையில் கல்வி ரீதியில் சமத்துவத்தைப் பேணிக் கொள்வது என்பது முடிவடையாத ஒரு செயற்பாடாகவே உள்ளது." கிழக்கு அல்லது மத்திய மாகாணத்தில் ஆரம்பக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு மேலும் அதனை திருப்தியான வகையில் ஜனநாயகப்படுத்த எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீர் என்பதனை விரிவாக ஆராய்க?

(10 புள்ளிகள்)

02.(அ) கல்விசார் முழுமையான அபிவிருத்தியில் முன்பள்ளிக் கல்வியும் முக்கியமான தளமாகவும், அடிப்படைக் கற்கையாகவும் அமைகின்றது. இந்த வகையில் முன்பள்ளிக் கல்விசார் நோக்கங்களையும், முக்கியத்துவத்தினையும் பற்றிய உமது கருத்துக்கள் நான்கினை விளக்குக?

(4x3=12 புள்ளிகள்)

(ஆ) அபிவிருத்தியடைந்த நாடுகளின் முன்பள்ளிகளில் காணப்படும் சிறப்பம்சங்களை, இலங்கையின் முன்பள்ளிகளில் நடைமுறைப்படுத்த முயல்கையில் ஏற்படக் கூடிய நிலைமைகள் மூன்றினையும் (03) பாதகமான நிலைமைகள் மூன்றினையும் (03) பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(6x2+1=13 புள்ளிகள்)

03.(அ) முழுமைப்பண்பு முகாமைத்துவம் என்றால் என்ன என்பதனைக் குறிப்பிட்டு, கல்வியில் பண்பு வீழ்ச்சிக்குரிய காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் காணப்படுகின்ற தொலைக்கல்வி, திறந்த கல்வி ஏற்பாடுகள் குறித்து கருத்துரை வழங்குக?

(13 புள்ளிகள்)

04.(அ) இலங்கையின் கல்வி வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட எழுச்சி கொண்ட நடவடிக்கைகளில் 1972 ஆம் ஆண்டு சீர்திருத்தம் ஏற்படுத்திய மாற்றங்கள் நான்கினை சுருக்கமாக ஆராய்க.

(4x3=12 புள்ளிகள்)

(ஆ) "செலவுப் பயன் ஆய்வுகளின்படி (Cost Benifitanalysis) ஆரம்பக்கல்வி தனியாளுக்கும், சமூகத்துக்கும் பயனுடையதாகவுள்ளது." பிள்ளைகளுக்குக் கட்டாய ஆரம்பக்கல்வி அளிப்பதன் அவசியத்தை எடுத்து விளக்குக?

(13 புள்ளிகள்)

05.(அ) ஜப்பானின் உயர் கல்விக் கட்டமைப்பில் பின்பற்றப்படுகின்ற விடயங்கள் எவ்வாறு அந்நாட்டின் கல்வியின் நோக்கங்களை அடைவதற்குச் சாதகமாக உள்ளன என்பதனை பொருத்தமான நான்கு உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

(4x3=12 புள்ளிகள்)

(ஆ) பெண்களுக்குக் கல்வியூட்டல் கல்வி வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை எற்படுத்தவல்லது. இந்தவகையில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பெண்கல்வி பெறும் முக்கியத்துவத்தினை பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(13 புள்ளிகள்)

06.(அ) இலங்கையின் தற்காலக் கல்விப் பிரச்சினைகள் நான்கினை பகுப்பாய்வு செய்க?

(4x3=12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கல்வி வரலாற்றில் 2007 – 2015 வரையாய காலப்பகுதியில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி சுருக்கமாக ஆராய்க.

(13 புள்ளிகள்)

*****